# அசாமில் 24 மணி நேரத்தில் 1,057 பேருக்கு கொரோனா!




ஆசாம், ஒகஸ்ட் 16

அசாமில் கடந்த 24 மணிநேரத்தில் 1,057 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

அசாம் மாநில சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, 'புதிதாக 1,057 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 75 ஆயிரத்து 558 ஆக அதிகரித்துள்ளது.

இதில் 22 ஆயிரத்து 87 பேர் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். மொத்தமாக குணமடைந்து வீடு திரும்பியவர்களின் எண்ணிக்கை 53 ஆயிரத்து 286 ஆக உள்ளது.

மேலும் கொரோனா வைரஸ் தொற்றால் கடந்த 24 மணிநேரத்தில் 8 பேர் உயிரிழந்தனர். இதனால் மொத்த உயிரிழப்பு 182 ஆக அதிகரித்துள்ளது' என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் இன்று தளர்வற்ற ஊரடங்கு!



தமிழ்நாடு முழுவதும் இன்று (ஞாயிற்றுக்கிழமை) தளர்வுகள் அற்ற முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கொரோனா நோய் பரவலைத் தடுக்க, இம்மாதம் 31ஆம் திகதி வரை, பொது ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், பொதுமக்கள் வாழ்வாதாரம் கருதி, அவ்வப்போது அரசு தளர்வுகளை அறிவித்து வருகிறது.

தளர்வுகள் அறிவிக்கப்பட்டாலும் நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக இம்மாதம் அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் தளர்வில்லாத முழு ஊரடங்கு அமுல்படுத்தப்படும் என முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்தார்.

அதன்படி, இன்று மாநிலம் முழுவதும் எவ்வித தளர்வும் இல்லாத முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கடைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளமையுடன், போக்குவரத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அதேநேரம் மக்கள் வெளியில் வராமல், வீடுகளில் இருந்து முழு ஊரடங்கிற்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என அரசு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், அரசின் உத்தரவை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸார் அறிவித்துள்ளனர்.

# சபரிமலை கோவில் நடை திறக்கப்பட்டது



ஆவணி மாத பூஜைகளுக்காக சபரிமலை கோயில் நடை இன்று (ஞாயிற்றுக்கிழமை) திறக்கப்படுகிறது.

மாலை 5 மணி அளவில் மேல்சாந்தி சுதீர் நம்பூதிரி கோயில் நடையை திறக்கிறார். தொடர்ந்து அடுத்த ஓராண்டுக்கான பொறுப்பை தந்திரி கண்டரர் ராஜீவரர் ஏற்கிறார். இன்று வேறு பூஜைகள் எதுவும் நடக்காதென அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை காலை 5 மணிக்கு நிர்மால்ய பூஜை, அபிஷேகம், மண்டபத்தில் கணபதி ஹோமம் என்பன நடைபெறும். தொடர்ந்து எதிர்வரும் 21ஆம் திகதி வரை பூஜைகள் நடக்கவுள்ளன எனக் கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# வாஜ்பாயின் நினைவுதினம் இந்தியாவில் அனுஷ்டிப்பு!



முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் நினைவு நாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மரியாதை செலுத்தினர்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் நினைவு தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை அனு;டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு, டெல்லியில் உள்ள அவரது நினைவிடமான 'சதைவ் அடல்' மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

அவரது நினைவிடத்தில் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

இதேநேரம், வாஜ்பாயின் நினைவு நாளையொட்டி அவரை நினைவு கூர்ந்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில், 'இந்தியாவின் முன்னேற்றத்திற்கு வாஜ்பாய் ஆற்றிய சேவையை நாடு எப்போதும் நினைவில் வைத்திருக்கும்' எனத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாய், உடல் நலக் குறைவு காரணமாக கடந்த 2018ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி தனது 93ஆவது வயதில் காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவால் உயிரிழந்தோர் 50 ஆயிரத்தைத் தாண்டியது!



இந்தியாவில் கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50ஆயிரத்தைக் கடந்துள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

உலகை அச்சுறுத்தியுள்ள கொரோனா வைரஸின் தாக்கம் இந்தியாவில் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. கடந்த 24 மணி நேரத்தில் இந்த வைரஸ் காரணமாக 950 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். உயிரிழப்புகளின் மொத்த எண்ணிக்கை 50 ஆயிரத்து 84 ஆகப் பதிவாகியுள்ளது.

அதேநேரம் கடந்த 24 மணி நேரத்தில் 63 ஆயிரத்து 986 பேருக்கு இந்த வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 25 இலட்சத்து 89 ஆயிரத்து 208 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இந்த தொற்றிலிருந்து இதுவரையில் 18 இலட்சத்து 60 ஆயிரத்து 672 பேர் மீண்டுள்ளனர். மேலும் 6 இலட்சத்து 78 ஆயிரத்து 452இற்கும் மேற்பட்டோர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றமையோடு, அவர்களில் 8 ஆயிரத்து 944 பேர் கவலைக்கிடமாக இருக்கின்றனர் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

# மயக்கத்திலிருந்து மீண்டார் எஸ்.பி.பி!



கொரோனா வைரஸுக்கு சிகிச்சைப் பெற்று வரும் இந்தியப் பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியம் மயக்க நிலையிலிருந்து மீண்டுள்ளார் என வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மொழி படங்களில் ஆயிரக்கணக்கான பாடல்களை பாடிய எஸ்.பி.பாலசுப்பிரமணியம், கடந்த 5ஆம் திகதி கொரோனா தொற்று காரணமாக சென்னை சூளைமேட்டில் உள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதனையடுத்த மறுநாள் அவருக்கு காய்ச்சல் குறைந்தது. '2 நாள்களில் முழுமையாக குணம் அடைந்து வீடு திரும்பி விடுவேன்' என்று கூறி அவர் ஒரு காணொலியையும் வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில், கடந்த 13 ஆம் திகதி அவருடைய உடல்நிலை மோசம் அடைந்தது. அவர் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். அவருக்கு உயிர் காக்கும் கருவிகள் உதவியுடன் சிகிச்சை அளிக்கப்பட்டது. இருப்பினும் அவருடைய உடல்நிலை கவலைக்கிடமானது. அவரது உடல்நிலையை தீவிர சிகிச்சை அளிக்கும் வைத்தியர்கள் 24 மணி நேரமும் கண்காணித்து வருகிறார்கள்.

இந்நிலையில் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் உடல்நிலை தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகம் தரப்பில் இருந்து ஓர் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதில், கொரோனா சிகிச்சை பெற்று வரும் பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியம் மயக்க நிலையிலிருந்து மீண்டார். எஸ்.பி.பி. அவ்வப்போது கண்விழிக்கிறார் என மருத்துவர்கள் தகவல் தெரிவித்துள்ளனர். நுரையீரல் தொற்றுக்கு வென்டிலேட்டர் உதவியுடன் தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என அதில் கூறப்பட்டுள்ளது.

எஸ்.பி.பாலசுப்பிரமணியம் சீக்கிரமே உடல் நலம் பெற்று வீடு திரும்ப வேண்டும் என்று தமிழ்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள அவருடைய ரசிகர்கள் பிரார்த்தனை செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனா தொற்று நியூஸிலாந்தில் அதிகரிப்பு தேர்தலை ஒத்திவைக்குமாறு பீட்டர் கோரிக்கை!



நியூஸிலாந்தில் செப்ரெம்பர் மாதம் நடத்த திட்டமிடப்பட்ட பொதுத் தேர்தலை தள்ளிவைக்குமாறு நியூஸிலாந்து துணைப் பிரதமர் வின்ஸ்டன் பீட்டர்ஸ் இன்று (ஞாயிற்றுக்கிழமை) அழைப்பு விடுத்தார்.

நாட்டில் கொரோனா தொற்றின் பரவல் திடீரென மீண்டும் அதிகரித்தமையின் காரணமாக, பிரதமர் ஜசிந்தா ஆர்டெர்ன் மீது தேர்தலை ஒத்திவைக்க வேண்டி அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

102 நாள்களாக புதிய கொரோனா தொற்று நோயாளிகள் எவரும் அடையாளம் காணப்படாதமையை அடுத்து செப்ரெம்பர் 19 அன்று சுதந்திரமானதும் நியானதுமான தேர்தலை நடத்த அரசாங்கம் தீர்மானித்தது.

இருப்பினும் கடந்த வாரம் அக்லாந்தில் கொரோனா தொற்று மீண்டும் அதிகரித்த காரணத்தால் தேர்தலை நடத்துவதை ஒத்திவைக்குமாறு பலர் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்நிலையிலேயே வின்ஸ்டன் பீட்டர்ஸ் ஆர்டெர்னுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

2017 தேர்தலுக்குப் பின்னர் கூட்டணி ஒப்பந்தத்தின் மூலம் ஆர்டெர்னின் தொழிற் கட்சிக்கு அரசாங்கத்தை வழங்கிய பீட்டர்ஸ், தேசிய அல்லது தொழிலாளர் கட்சிகளுக்கு பெரும்பான்மையை வழங்கத் தவறியமையால், ஒக்ரோபர் 17 மற்றும் நவம்பர் 21 ஐ மாற்று திகதிகளாகப் பரிந்துரைத்தார்.

இருப்பினும் இன்று ஞாயிற்றுக்கிழமை, நியூஸிலாந்தில் உறுதிப்படுத்தப்பட்ட 13 தொற்று நோயாளிகள் அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்து தற்போது 69 நோயாளிகள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனை அடுத்து 1.7 மில்லியன் மக்கள் தொகை கொண்ட நாட்டின் மிகப்பெரிய நகரமான அக்லாந்தை ஆர்டெர்ன் கடந்த வாரம் இரண்டு வார முடக்க நிலையின் கீழ் வைத்தார்.

இந்நிலையில் பொதுத்தேர்தலை தள்ளிவைப்பதற்க்கான அறிவிப்பை எதிர்வரும் திங்கட்கிழமை ஜசிந்தா ஆர்டெர்ன் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெடிக்கத் தொடங்கியது எல் போபோ எரிமலை!



மெக்ஸிகோவில் உள்ள எல் போபோ எரிமலை சாம்பலையும், புகையையும் அதிக அளவில் வெளியேற்றி வருவதால் மக்களை பாதுகாப்பாக இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளது.

மெக்ஸிகோவின் அடையாளமாகக் கருதப்படும் இந்த எரிமலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெடிப்பு ஏற்பட்ட நிலையில் சுமார் ஆயிரத்து 968 அடி உயரத்திற்கு சாம்பலையும், புகையையும் எல் போபோ எரிமலை வெளியேற்றி வருகிறது.

இதனைத் தொடர்ந்து மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு மெக்ஸிகோவின் பேரிடர் தடுப்புக்கான தேசிய மக்கள் மையம் அறிவுறுத்தியுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் இந்த எரிமலை 36 முறைக்கும் அதிகமாக சாம்பல் மற்றும் புகையை வெளியேற்றியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# றொனால்ட் ட்ரம்பின் சகோதரர் உடல் நலக்குறைவால் மரணம்!



அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் ட்ரம்பின் இளைய சகோதரர் றொபேர்ட் ட்ரம்ப் தனது 72 ஆவது வயதில் காலமானார் என வெள்ளை மாளிகை உறுதிப்படுத்தியுள்ளது.

‘அவர் என் சகோதரர் மட்டுமல்லர், அவர் எனது சிறந்த நண்பர்’ என்று றொனால்ட் ட்ரம்ப் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க் நகர வைத்தியசாலை ஒன்றில், உடல் நலக் குறைவு காரணமாக சிகிச்சை பெற்றுவந்த றொபேர்ட் ட்ரம்ப்பை கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி ட்ரம்ப் வைத்தியசாலைக்குச் சென்று நேரில் நலம் விசாரித்தார்.

அமெரிக்க ஊடக அறிக்கைகள் றொபேர்ட் ட்ரம்ப் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருக்கிறார் எனக் கூறியிருந்தன, ஆனால் அவருக்கு என்ன பாதிப்பு என்பது தெளிவாகத் தெரியவில்லை.

மேலும் ‘எனது அருமையான சகோதரர் றொபேர்ட் இன்று இரவு நிம்மதியாக காலமானார் என்பதை நான் கனமான இதயத்துடன் பகிர்ந்து கொள்கிறேன். அவரது நினைவு என் இதயத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும்.’ என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

# பிடலைவிட கமலா மோசமானவர் றொனால்ட் ட்ரம்ப் குற்றச்சாட்டு!



ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோ பிடன் ஜனாதிபதியாவாரானால் அமெரிக்கா பாதுகாப்பாக இருக்காது என்றும் அவரைவிட ஒருபடி மோசமானவர் துணை ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹரீஸ் என அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் ட்ரம்ப் குற்றம் சாட்டினார்.

அமெரிக்காவில் நவம்பர் 3 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இதில் குடியரசுக் கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப், இரண்டாவது தடவையாகவும் போட்டியிடுகிறார். ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோ பிடன் ஜனாதிபதி பதவிக்கும், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹரீஸ் துணை ஜனாதிபதி பதவிக்கும் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில், நேற்று இடம்பெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், ’ஜோ பிடன் ஜனாதிபதியாவா ரானால் அமெரிக்கா பாதுகாப்பாக இருக்காது. அவரைவிட துணை ஜனாதிபதியாகப் போட்டியிடும் கமலா ஹரீஸ் மோசமானவர்.

ஜோபிடன் அதிபராவாரானால் உடனடியாக பொலீஸ் துறையை ஒன்றுமில்லாமல் செய்வதற்கு சட்டத்தைக் கொண்டு வந்துவிடுவார். கமலா ஹரீஸ் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்.

அவரைவிட எனக்கு இந்திய வம்சாவளியினரின் ஆதரவு அதிகம் இருக்கிறது. ஜோ பிடன், கமலா ஹரீஸ் இருவருமே பொலிஸ் துறைக்கு எதிராகச் செயற்படக் கூடியவர்கள். உங்களுடைய மரியாதையை, கௌரவத்தை இருவரும் பறிக்கின்றனர்’ என ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்தார்.

# எதிர்ப்பு போராட்ட காரருக்கு பெலாரஸ் தூதுவர் ஆதரவு!

ஸ்லோவாக்கியாவிற்கான பெலரஸ் தூதுவர் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போராட்டக் காரர்களுக்கு தனது ஆதரவை அறிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக காணொளி ஒன்றை வெளியிட்டுள்ள அவர், பெலரஷ்ய நகரங்களில் அமைதியான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எனது ஆதரவைத் தெரிவிக்கின்றேன்.

துன்பத்தின் மூலம் பெலரசியர்கள் இந்த உரிமையை அடைந்துள்ளனர் என தூதுவர் இகோர் லெஷ்சென்யா தெரிவித்துள்ளார்.

மேலும் அனைத்து பெலாரசியர்களையும் போலவே, எனது நாட்டின் குடிமக்களை சித்திரவதை செய்த மற்றும் அடித்ததாக வெளியான செய்திகளை கண்டு அதிர்ச்சியடைகிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# நூற்றுக்கணக்கான அமெரிக்கர் கனடாவுக்குள் நுழைய முயற்சி!

கனடாவும் அமெரிக்காவும் எல்லையை மூடுவதை இன்னும் ஒரு மாதத்திற்கு நீட்டிக்கும்போது, எங்கள் பகிரப்பட்ட எல்லையில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அமெரிக்கர்கள் திருப்பி விடப்பட்டுள்ளனர். அவர்களில் பாதி பேர் கனடாவுக்கு வருகை தந்து தொற்றுநோயையும் மீறி, கடையை வேடிக்கை பார்க்க வருகிறார்கள்.

மார்ச் 22 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 5 ஆம் திகதி வரை 12 ஆயிரத்து 819 அமெரிக்க குடிமக்கள் பகிரப்பட்ட எல்லையிலிருந்து விலகிச் செல்லப்பட்டுள்ளனர்.

அவர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் கனடாவுக்கு வருகை தருகின்றமையை வெளிப்படுத்திய பின்னர் உள்ளே நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அமெரிக்க குடிமக்கள் வெளியிடப்படாத பிற காரணங்களுக்காக திருப்பி விடப்பட்டாலும், மொத்தம் 3ஆயிரத்து 658 அமெரிக்கர்கள் சுற்றுலா அல்லது பார்வையிடலுக்காக கனடாவுக்கு வர முயன்றனர்.




ஜுலை 12 ஆம் திகதி மொத்தம் 2 ஆயிரத்து 840 பேர் அமெரிக்காவிலிருந்து நுழைந்தனர். அவர்களில் 1,000 நபர்கள் கனடாவின் சுற்றுலா தலங்களை பார்க்க வேண்டும் என்று தெரிவித்து நுழைந்தனர்.

அதோடு, கனடாவில் 1,500 இற்கும் மேற்பட்ட அமெரிக்கர்கள் தங்கள் வருகைக்கான காரணம் பொழுதுபோக்கு என்று மேற்கோள் காட்டியுள்ளனர். அதே நேரத்தில் 600 இற்கும் மேற்பட்டோர் அத்தியாவசியமற்ற பொருள்கள் கொள்வனவையும் காட்டியுள்ளனர்.

மார்ச் நடுப்பகுதியில் கனடா தனது எல்லைகளை வெளிநாட்டினருக்கு மூடியது. ஆரம்பத்தில் அமெரிக்க குடியிருப்பாளர்களுக்கு புதிய விதிகளிலிருந்து விலக்கு அளித்தது. ஆனால் சில நாள்களில் கனடா – அமெரிக்க எல்லை அனைத்து அத்தியாவசிய பயணங்களுக்கும் மூடப்பட்டது.

அரசாங்கம் வெள்ளிக்கிழமை அறிவித்த ஓர் ஒப்பந்தம் செப்ரெம்பர் 21ஆம் திகதி வரை நீட்டிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

